ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தமிழில் தன் வரலாற்றுப் பதிவுகளின் வரலாறு – ஒரு நோக்கு

வெ. இரமேஷ்
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை, கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குடியாத்தம்

*முன்னுரை*

*வரலாறு என்பது கடந்தகாலத்தின் தொகுப்பு என்று கூறப்படுவது உண்டு. வரல்+ஆறு என்ற இரு சொற்களின் கூட்டுச்சொல்லே வரலாறு என்பதாகும். ஆறு என்ற சொல்லுக்கு 'வழி' என்பது பொருள். வந்த வழி அல்லது கடந்து வந்த வழி என்ற பொருளிலேயே வரலாறு என்னும் சொற்பதம் ஆளப்பட்டு வருகிறது. தனிமனிதர்களை மையப்படுத்தியே வரலாறு என்பது சொல்லப்பட்டு வந்த நிலைமை முற்றிலும் மாறி, குறிப்பிட்ட காலகட்டம், நிகழ்வுகள், அமைப்புகள் ஆகியவற்றைக் குறித்தும் வரலாறு பேசத்தொடங்கி இருக்கிறது.*

*வரலாற்று நாயகர்களாக விளங்கியவர்களின் வரலாறு மட்டும் வரலாறல்ல; சாமானிய மனிதர்களின் வரலாறும் வரலாறே என்ற புரிதல் வரலாற்றுக் களத்தில் ஏற்பட்டுள்ளது. தனியொரு மனிதர் தன்னுடைய வாழ்வையும், தன்னுடைய இருப்பையும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியதன் வெளிப்பாடாகவே 'தன் வரலாற்று நூல்கள்' தோன்றின எனலாம்.*

*குறிச் சொற்கள்:*

*வரலாறு – தன் வரலாறு – தேசிய இயக்கக் கவிஞர்கள் – வாழ்க்கைக் குறிப்புகள் – எதிர்ப்பிலக்கியம் – சமுதாய வரலாறு – சமூக இயக்கம் – வாழ்க்கை வரலாற்றிலக்கியம் – வரலாற்றுக் குறிப்புகள்.*

*இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் சி.சுப்பிரமணிய பாரதியார் தனது சுயசரிதையினைக் கவிதை வடிவில் வெளியிட்டார். அவரால் சுயசரிதை வெளியிடப்பட்ட ஆண்டு 1910 ஆகும். நாற்பத்தொன்பது பாடல்களைக் கொண்ட அவரது சுயசரிதை, அவரது வாழ்க்கையின் போக்கினையும் துன்பங்களையும் தொகுத்துரைக்கிறது.*

*"நாயகரின் பத்தாவது வயது நிகழ்ச்சிகள் தொடங்கிப் பின்னர் அவர் திருமணம் நிகழ்ந்தது, தந்தை இறந்தது, வறுமை எய்தியது ஆகிய செய்திகள் வரை இதிலே சொல்லப்பட்டுள்ளன. இடையே ஆங்கிலக் கல்வியின் கேடும், பார்ப்பனக் குலம் கெட்டழிவெய்திய செய்தியும், பொருளின் பெருமையும் சொல்லப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட நோக்கிலும் கசப்புணர்ச்சியிலும் எழுதப்பட்டிருந்தாலும் ஒரு சிறுபகுதியே சொல்லப்பட்டிருப்பதாலும், இதை ஒருசில குறிப்புகளின் தொகுப்பு என்றே சொல்ல வேண்டும்"[1].*

*"இதனைத் தொடர்ந்து பாரதியே 'பாரதி அறுபத்தாறு' என்ற சிறு நூலினையும் அவர் படைத்திருக்கிறார். இதே காலத்தில் வ.உ.சிதம்பரம்பிள்ளை தன்னுடைய வரலாற்றை எழுதத் தொடங்கியிருக்கிறார். அவரது சுயசரிதையின் பிற்பகுதி, அவர் கோவைச் சிறையிலிருந்து வெளிவந்த பிறகு, அதாவது 1912 இல் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கிறது"[2].*

*சக்கரவர்த்தி சி.இராஜகோபாலாச்சாரியார் சிறையிலிருந்தபோது எழுதிய வாழ்க்கைக் குறிப்புகள் 'சிறையில் தவம்' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கிறது. இக்குறிப்புகளை இராஜாஜி 1921 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் நாள் முதல் 1922 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் நாள் வரையில் எழுதியிருக்கிறார்.*

*தமிழ் நாடகப் பேராசிரியர் என்று சிறப்பிக்கப்படுகிற பம்மல் சம்பந்த முதலியாரின் நாடக அனுபவங்கள் 'நாடக மேடை நினைவுகள்' என்னும் தலைப்பில் நூலாகியிருக்கின்றன.*

*"1930 ஆம் வருஷம் எனது நண்பராகிய சுதேசமித்திரன் பத்திராதிபர், எனது நாடகமேடை நினைவுகளைத் தன் பத்திரிகைக்கு எழுதியனுப்பும்படிக் கேட்க, அதற்கிசைந்து அவ்வருடம் ஜூன் மாதம் முதல், வாரந்தோறும் சில வருடங்களாக எழுதிவந்தேன். மூன்று நான்கு வருடங்கள். அவைகளை எல்லாம் பிறகு ஐந்து பாகங்களாக அச்சிட்டுள்ளேன். கடைசியாக, நாளது (1938) வரையிலுள்ள நாடகமேடை நினைவுகள் இந்த ஆறாம் பாகமாக அச்சிட்டுள்ளேன்"[3] என்று குறிப்பிடுகிறார் பம்மல் சம்பந்தனார்.*

*தனது நாடகமேடை நினைவுகள் நூலில் தனது இளவயது நாடக ஈடுபாடு முதல் அக்காலகட்டத்து நாடக நடிகர்கள், குழுக்கள், அவர்களின் நாடகச் செயல்பாடுகள் எனப் பல்வேறு செய்திகளைத் தன் வாழ்க்கைப் போக்கோடு இணைத்துப் பகிருகிறார் பம்மலார்.*

*"அன்று நடித்த அத்தனை பேரையும் அன்று நடந்த ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியையும் அதற்குக் காரணமான பழைய நிகழ்ச்சிகளையும் இவர் ஒன்றுவிடாமல் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்துள்ளதைக் காணும் யாரும் திகைப்பே அடைவார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சியும், கதைக்குள் கதையாக அமையும் நெடுங்கதைபோல விரிந்து விரிந்து செல்லுவதே இவருடைய நினைவின் தனி இயல்பு"[4] என்கிறார் பேராசிரியர் சாலினி இளந்திரையன்.*

*"பம்மல் சம்பந்த முதலியார் நாடக மேடை நினைவுகளை எழுதிய இதே காலகட்டத்தில் தனது சுயசரிதையைச் சுவைபட எழுதினார் உ.வே.சாமிநாதையர். தனது வாழ்க்கை, தனது இலக்கியக் கல்வி, இலக்கிய ஆர்வம், ஆசிரியப்பணி, ஏடுகளைத் தேடிப் பதிப்பிக்கும் பணி, அவற்றில் ஏற்பட்ட தனித்த அனுபவங்கள் என்று பல்வேறு நிகழ்வுகளை அவர் தொடர்ச்சியாக எழுதினார். உ.வே.சாமிநாதையரின் எழுத்துக்கள் பின்பு தொகுக்கப்பட்டு, 'நான் கண்டதும் கேட்டதும்', 'புதியதும் பழையதும்', 'நல்லுரைக் கோவை', 'நினைவுமஞ்சரி' ஆகிய தலைப்புகளில் நூலாகின. பிற்காலத்தில் இவை வரிசைப்படுத்தப்பட்ட முறையில் 'என் சரித்திரம்' என்னும் நூல் வெளிவந்தது"[5].*

*பம்மல் சம்பந்த முதலியார், உ.வே.சாமிநாதையர் முதலானவர்களின் தன் வரலாற்று எழுத்துப் பதிவுகள் தமிழ் இலக்கியவாதிகள், சிந்தனையாளர்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தின. தாமும் தன் வரலாறு எழுத வேண்டும் என்ற உத்வேகத்தைப் பலருக்கு இம்முயற்சிகள் ஏற்படுத்தின. இதன் தாக்கத்தால் தன் வரலாற்றை எழுதப் புகுந்தவர் என்று திரு.வி.கலியாண சுந்தரனாரைக் குறிப்பிடலாம்.*

*திரு.வி.க. தனது வாழ்க்கை வரலாற்றை மிகப்பெரிய அளவில் எழுதி வெளியிட்டார். 1944 ஆம் ஆண்டு இவரது தன் வரலாற்று நூல் வெளியாகியது.*

*"டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர், திரு.வி.க., கோவை ஐயாமுத்து, நாமக்கல் கவிஞர், டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் ஆகியோரின் தன் வரலாற்று நூல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் மட்டுமல்லாமல் தமிழக அரசியல், சமுதாய வரலாற்றிலும் மிகவும் குறிப்பிடத்தக்கவை. ஐயரவர்கள் தவிர மற்ற மூவரும் தேசிய இயக்கத்திலும் மிகப்பெரும் பங்கு பெற்றவர்கள். ஆகையால், தேசிய இயக்கத்தின் வரலாறு பற்றி அறிய விரும்புவோருக்கு இவர்களின் தன் வரலாற்று நூல்கள் ஆவணக் குறிப்புகளைத் தரக்கூடியவையாகும். இவர்களுள் திரு.வி.க. சமய / சமூக இயக்கங்களிலும் ஈடுபட்டவர். எனவே, ஒருவகையில் தமிழக வரலாற்றின் பல்வேறு கூறுகளை அறிந்துகொள்ளக்கூடிய குறிப்புகளை அவர் வழங்கிய வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து திரட்ட முடிகிறது. இங்கே குறித்த தன் வரலாற்று நூல்கள் யாவுமே மிகவும் சிறந்தன. எனினும் தமிழகத்தின் முழுமை வரலாற்றுக்குப் பயன்படும் வகையில் திரு.வி.க.வின் வாழ்க்கைக் குறிப்புகள்' என்னும் நூல் முதலிடம் பெறும் தகுதியுடையது என்பதில் ஐயமில்லை"[6] என்கிறார் திரு.வி.க. குறித்த வரலாற்று நூலினைப் படைத்த பேராசிரியர் ம.ரா.போ.குருசாமி.*

*ஏறத்தாழ 987 பக்கங்களில் உருவாகியுள்ள திரு.வி.க.வின் வாழ்க்கைச் சரித்திரக் குறிப்புகள் தன் வரலாற்று நூல்களில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. "இந்த நூல் தோற்றுவாய் முதல் இறுவாய் ஈறாகப் பதினைந்து பகுதிகளாகப் பிரித்து அமைக்கப்பட்டுள்ளது. ஓர் ஆய்வாளனுக்குரிய தெளிவோடு தம்முடைய வாழ்வை மதிப்பீடு செய்துள்ள இப்பெரியவர், அந்தண்மை என்பதற்கு அழகானதொரு விளக்கம் தந்துவிட்டு, 'எனது வாழ்க்கையில் அந்தண்மை இடம் பெற்றதா? இல்லையா? இதற்குச் சோதனை வேண்டும். என் வாழ்க்கைக் குறிப்புகள் வெளிவரின் சோதனைக்கு வழி ஏற்படும்' என்று குறித்துள்ளார்"[7] என்று எடுத்துக்காட்டுகிறார் சாலினி இளந்திரையன்.*

*தமிழகத்தின் தேசிய இயக்கக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவரான நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளையவர்களின் 'என் கதை' குறிப்பிடத்தக்க தன் வரலாற்றுப் படைப்பாகும். 1944 ஆம் ஆண்டில் இவரது தன் வரலாறு வெளிவந்தது.*

*"என்னுடைய வாழ்க்கையைப் பற்றிய சிற்சில நினைவுகளை எழுதிவைத்தால் பொழுது போக்காகப் படிப்பதற்கு மட்டுமாவது பயன்படலாம் என்ற ஆசையினால் இந்த 'என் கதையை' எழுதலானேன். இது வாழ்க்கையின் வரலாறுகள் வரிசைக்கிரமமாக எழுதப்பட்ட சரித்திரம் அல்ல. நினைவில் இருந்த நிகழ்ச்சிகளைப் படிப்பவர்களுக்குப் பாரமாகத் தோன்றாமலிருக்க வேண்டும் என்ற ஓர் எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு எழுதப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் தொகுதி"[8] என்று தனது நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார் நாமக்கல் கவிஞர்.*

*பிறப்பு, வளர்ப்பு, ஓவியராகப் பரிமாணம் பெற்றது, அலுவல், குடும்ப வாழ்க்கை முதலானவை இத்தன்வரலாற்றின் முதறப்பகுதியாகவும் கவிஞராகவும் எழுத்தாளராகவும் உரையாசிரியராகவும் வாழ்ந்த வாழ்க்கை இந்நூலின் கடைசிப் பகுதியிலும் குறிப்பிடப்படுகிறது.*

*"என் கதை என்னும் இந்தத் தன்வரலாற்று நூல் ஒரு நாவல் போலத் தொடங்குகிறது. முதலாம் அத்தியாயத்தில் ஒரு குழந்தையின் பிறப்பைப் பற்றிச் சுவைபட விவரித்த ஆசிரியர், அதன் முடிவில், 'அந்தக் (குழந்தை) கறுப்பண்ணன்தான் நான்; என்னை என் தாயார் எப்போதும் கறுப்பண்ணா என்றுதான் அழைப்பார்கள்' என்று சொல்லும்வரை, நாம் ஒரு புனைகதையைப் படித்து வருவதாகவே தோன்றுகிறது. நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துள்ள முறை, அவற்றை விவரிக்கும் விதம், ஆசிரியருடைய தெளிந்த தமிழ்நடை எல்லாமாகச் சேர்ந்து 'என் கதை'க்குச் சிறப்பூட்டுகின்றன"[9] என்பது சாலினி இளந்திரையன் அவர்களின் மதிப்பீடாகும்.*

*நாமக்கல் கவிஞரின் என் கதை, தமிழில் வெளிவந்துள்ள தன் வரலாற்று நூல்களில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. குறிப்பாக, தமிழ் இலக்கியத்துறையில் படைப்பாளியாகவும் சுதந்திரப் போராட்ட வீரராகவும் திகழ்ந்த அவருடைய குறிப்புகள் ஏராளமான வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கியதாகத் திகழ்கிறது.*

*"தி.சே.சௌ.ராஜன் படைத்த 'நினைவு அலைகள்' என்னும் தன் வரலாற்று நூல் தமிழில் குறிப்பிடத்தக்க தன் வரலாற்று நூல் ஆகும். இந்நூல் 1947 ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நூல் தன் வரலாற்று நூல்களின் வரிசையில் ஒரு முதிர்ச்சியைக் கொண்ட நூல் என்று ஆய்வாளர்கள் கருத்துரைக்கின்றனர்"[10].*

*இந்தியா விடுதலை பெற்ற ஆண்டாகிய 1947 ஆம் ஆண்டிலேயே வெளியிடப்பட்ட மற்றொரு சுயசரிதை கவியோகி சுத்தானந்தபாரதியார் எழுதியதாகும். இந்நூலின் தலைப்பு, 'ஆத்ம சோதனை' என்பதாகும். 620 பக்கங்கள் அளவிலானது இந்நூல். "இந்தத் தன்வரலாறு ஒருவகையான அதீதப் போக்குடனேயே எழுதப்படுகிறது. இவருக்கு ஏற்படப் போகின்றவற்றை எல்லாம் வயது வரிசையில் பூரணானந்தர் என்பவர் முன்கூட்டியே சொல்லிவிட்டதாகவும் அதன்படியே எல்லாம் நடந்து வருவதாகவும் சுத்தானந்தர் குறிப்பிடுகிறார். இடையிடையே ஆசிரியரப் பணியிலும், அரசியலிலும், நூல் ஆக்கத்திலும் ஈடுபட்ட செய்திகளும் சொல்லப்படுகின்றன. இதில் பல செய்திகள் எந்த நோக்கும் இன்றி, நினைவு கூரப்பட்டுள்ளன. ஆயினும் ஒரு துறவியின் வாழ்வு என்ற வகையில், இதன் நோக்கையும் போக்கையும் ஒருவாறு ஏற்கலாம்; உலகாயத நெறிகளிலேயே ஈடுபட்டு, அது தொடர்பான செய்திகளையே தெரிந்து வருபவர்களுக்குச் சற்றே வேறுவிதமான செய்திகளைத் தருவது இந்தப் புத்தகத்தின் ஒரு புதுமை என்று சொல்ல வேண்டும்"[11] என்பர்.*

*1955 ஆம் ஆண்டு பி.எஸ்.குமாரசாமி ராஜா எழுதிய 'இளமை நினைவுகள்' என்னும் தன் வரலாற்று நூல் வெளிவந்தது. அ.மு.பரமசிவானந்தம் எழுதிய 'இளமையின் நினைவுகள்' என்னும் தன் வரலாற்று நூல், 1958 இல் வெளிவந்தது. பாவேந்தர் பாரதிதாசனார் தனது வாழ்க்கைச் சுருக்கத்தை 137 அடிகள் கொண்ட அகவற்பா யாப்பில் படைத்தார். அவரது வாழ்க்கைச் சுருக்கம் வெளிவந்த ஆண்டு 1960 ஆகும். 1963 ஆம் ஆண்டு கவிஞர் கண்ணதாசனின் 'வனவாசம்' என்னும் தன்வரலாற்று நூல் வெளிவந்தது.*

*"நான் நடந்து வந்த பாதை, தனி வாழ்வில் நான் பட்ட துயரங்கள், இவையெல்லாம் ஒரு கதைபோல் இருப்பதாக நான் கருதினேன். ஆகவே, வேறு கதாபாத்திரங்களை உற்பத்தி செய்து கதை எழுதுவதைவிட, என்னையே பாத்திரமாக்கி உண்மையைக் கதைவடிவில் சொல்ல நான் விரும்பினேன். அந்த முயற்சியே இந்த நூலாக எழுந்தது"[12] என்பது கவிஞர் கண்ணதாசன் தனது தன் வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும் குறிப்பு ஆகும்.*

மேற்குறித்த குறிப்புகள், தன் வரலாற்று நூல்கள் தமிழில் வெளிவந்த முறைமையையும் அவற்றின் உள்ளடக்க அமைப்பினையும் விளக்கின. தன் வரலாற்று நூல்கள் காலப்போக்கில் பல்வேறு மாற்றங்களைப் பெற்றன என்பதை அறியமுடிகிறது.

தொடக்க காலத்தில் தன் வரலாற்று நூல்கள் என்பவை, ஒரு தனி மனிதனின் சுயத்தை வெளிப்படுத்தக்கூடியவையாக மட்டுமே அறியப்பட்டன. ஒரு குறிப்பிட்ட மனிதனின் ஆளுமையையும், அவர்களின் சாதனைகளையும் வரலாறாகத் தொகுத்தளிக்கும் முயற்சியே தொடக்கக் காலத் தன் வரலாற்று நூல்களின் பொதுப்போக்காக இருந்தது. பிற்காலத்தில் எழுந்த வரலாறு பற்றிய கருத்துருவங்கள் இப்போக்கின் செல்நெறியை முற்றிலும் மாற்றி அமைக்கின்றன. நவீனச் சிந்தனைகளின் வளர்ச்சியால், தன் வரலாறு என்பது சாதனைகளின் தொகுப்பல்ல; அது எளிய மனிதனின் வாழ்க்கையையும் உரைக்கலாம் என்ற சிந்தனை தோன்றிப் பெருகியது. அதன் காரணமாகத் தமிழில் ஏராளமான தன் வரலாறுகள் தோன்றலாயின.

“கருப்பினத்தவர், அடிமைகள், சிறைக்கைதிகள், பெண்கள் ஆகியோர் விளிம்புநிலை தன் வரலாற்று இலக்கிய வளர்ச்சிக்கு வழிகோலினர். தனிமனிதர்களின் வாழ்க்கையானது குடும்பத்தையும் சமூகத்தையும் சார்ந்து இருப்பதால், அவர்கள் படைக்கும் தன்வரலாறுகள் குடும்ப ஆவணமாகவும், சமூக ஆவணமாகவும் அமைகின்றன. அடித்தள மக்கள் தன்வரலாறுகளைப் படைக்கும் போது, அத்தன்வரலாறுகள் விடுதலைத் தேடலாகவும், அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவதற்கான எதிர்ப்பிலக்கியமாகவும், கலகக் குரலாகவும் வடிவம் பெறுகின்றன”[13] என்பர்.

தன் வரலாறு என்பது தனித்த இலக்கிய வகையாக இன்று ஏற்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பல்வேறு தன் வரலாறுகள் தமிழில் வெளிவந்தவண்ணம் உள்ளன. மிகப்பெரும் ஆளுமைகள் மட்டுமின்றி எளிய மக்களின் தன் வரலாறுகளும் தமிழில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

- தமிழின் தொடக்ககாலத் தன்வரலாற்றுப் பதிவுகளாகக் கொள்ளத்தக்கவை பாரதியாரின் ‘கனவு’ என்னும் தலைப்பிலான சுயசரிதையும் சி.இராஜகோபாலாச்சாரியாரின் ‘சிறையில் தவம்’ என்னும் நூலும் தமிழ் நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியாரின் ‘நாடக மேடை நினைவுகளும்’ ஆகும்.
- தன்வரலாறு என்பது ஒரு மனிதரின் முழுமையான பதிவுகள் அன்று; மாறாக, அவர் எழுதும் காலம் வரையிலான பதிவு ஆகும். எனவே ஒருவகையில் தன்வரலாறுகள் முழுமைபெற்ற வரலாறுகளாக ஆவதில்லை.
- தன்வரலாற்றுப் பதிவுகளில் தன் வாழ்க்கையின் மிக முக்கியமான போராட்டத்தை மையப்படுத்தி எழுதும் போக்கு வெளிப்படுவதைக் காணமுடிகிறது. பல ஆளுமைகள் தன் துறைசார்ந்த வெளிப்பாடுகளாகத் தன்வரலாறுகளைப் படைத்திருக்கிறார்கள். தன் வாழ்க்கை நிகழ்வுகளையும்கூடப் பகுதி பகுதியாகப் பகுத்துரைக்கும் முறைமையும் இருப்பதை அடையாளங்காண முடிகிறது. சில ஆளுமைகள் தங்களின் தன்வரலாறுகளைப் பல்வேறு பெருந்தொகுதிகளாகப் பகுத்து எழுதி வெளியிட்டுள்ளனர்.

நினைவுகளின் தொகுப்பாகவே தன்வரலாற்றைக் கருதும் எழுத்தாளர்களும் உள்ளனர். அவர்கள் தங்களின் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்த்து நினைவுகூர்வதாகவே தங்களின் தன்வரலாறுகளை அமைத்துள்ளனர்.

சான்றெண் விளக்கம்


1. சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், ப.163-164.
2. எஸ். கண்ணன், வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை, ப.8.
3. சம்பந்த முதலியார், நாடகமேடை நினைவுகள், ப.15.
4. சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், ப.165.
5. உ.வே.சாமிநாதையர், என் சரித்திரம், ப.1.
6. ம.ரா.போ.குருசாமி, திரு.வி.க. ப.69.
7. சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், ப.166.

8. நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கன், என் கதை, ப.6.
9. சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்றிலக்கியம், ப.169.
10. மேலது, ப.172.
11. மேலது, ப.175.
12. கண்ணதாசன், வனவாசம், பக்.5-6.
13. அ.ஆரோக்கிய ஜெயசீலி, பெண் தன்வரலாற்றுப் பதிவுகள், பக்.9-10.


துணை நூற் பட்டியல்

ஆரோக்கிய ஜெயசீலிஅ., 'பெண் தன் வரலாற்றுப் பதிவுகள்', நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2015.

இராமலிங்கம்.வெ நாமக்கல் கவிஞர் என் கதை; பாவாணர் ஏடகம், சென்னை; 2012.

கண்ணதாசன் வனவாசம்; கண்ணதாசன் பதிப்பகம், சென்னை; 2015.

கண்ணன்.எஸ், 'வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2005.

குருசாமி.ம.ரா.போ., 'திரு.வி.க.', சாகித்திய அகாதெமி வெளியீடு, புதுதில்லி, 1998.

சம்பந்த முதலியார்.பம்மல், 'நாடகமேடை நினைவுகள்', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 1998.

சாமிநாதையர்.உ.வே என் சரித்திரம்; உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை; 2017.

சாலினி இளந்திரையன், 'வாழ்க்கை வரலாற்றிலக்கியம்'; மெய்யப்பன் தமிழ் ஆய்வகம், சிதம்பரம்; 2002.


********* ********* ********** ********* ********* ********** ********** **********